# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் ஜெர்மனியிலுள்ள பைத்துஸ் ஸபுஹ் பள்ளிவாயிலில் 25.05.2012 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹாவை ஓதிய பிறகு ஹுஸுர் அவர்கள் கூறினார்கள்:**

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்:** நான் இறைவனுக்கு நன்றி செலுத்துகிறேன். அவன் எனக்கு ஒரு தூய, விசுவாசமுள்ள ஜமாஅத்தை வழங்கியிருக்கின்றான். எந்த வேலைக்காக, எந்த நோக்கத்திற்காக நான் அவர்களை அழைக்கிறேனோ மிகவும் விரைவாகவும், மிகவும் உணர்வுடனும், ஒருவர் மற்றவரை விட தனது தைரியம், மற்றும் வாய்ப்பிற்கேற்ப அதன் பக்கம் விரைந்து வருவதை நான் பார்க்கின்றேன். மேலும் அவர்களிடம் உண்மை மற்றும் தூய்மை தென்படுவதை நான் பார்க்கின்றேன். நான் ஏதாவது ஒரு பணியின் பக்கம் சைகை காட்டினால் அதை செய்வதற்கு அவர்கள் தயாராக இருக்கிறார்கள்.

கூறுகின்றார்கள்: உண்மையில் எந்தவொரு சமுதாயமும், ஜமாஅத்தும் தனது இமாமுக்கு கட்டுப்படுவது மற்றும் பின்பற்றுவதற்கு இதுபோன்ற உணர்வு, தூய்மை மற்றும் விசுவாசத்தன்மை அதில் இல்லாத வரை தயாராக இருப்பதில்லை.

ஹஸ்ரத் மஸீஹ் (அலை) அவர்களுக்கு ஏற்பட்ட கஷ்டங்கள் மற்றும் துன்பங்கள் போன்றவை அவர்களுடைய சீடர்களிடம் இருந்த ஜமாஅத்தின் குறைபாடு மற்றும் விருப்பமின்மையே ஆகும்.

அதாவது ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களைப் பற்றி கூறுகின்றார்கள்.

ஆனால் இதற்கு நேர் மாற்றமாக ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களது சஹாபாக்கள் ரலியல்லாஹு அன்ஹும் அவர்கள், உண்மை மற்றும் விசுவாசத்தினை எடுத்துக் காட்டினார்கள். இதுபோன்ற ஓர் உதாரணம் உலக வரலாற்றில் கிடைக்கப் பெறாது. அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களுக்காக எல்லாவிதமான கஷ்டங்களையும் தாங்கிக் கொள்வதை எளிதாகக் கருதினார்கள். எந்த அளவுக்கென்றால் தனது விருப்பமான நாட்டைத் துறந்து சென்றார்கள். தனது உறவினர்களை, நண்பர்களை விட்டும் பிரிந்து சென்றார்கள். இறுதியில் பெருமானார் (ஸல்) அவர்களுக்காக தனது உயிரைக் கொடுப்பதிலும் கூட பின்னடையவோ, வருத்தமடையவோ இல்லை.

இதே உண்மை மற்றும் விசுவாசம்தான் இறுதியில் வெற்றி அடையச் செய்தது. இதனைப் போன்றே நான் பார்க்கின்றேன். அல்லாஹ் எனது ஜமாஅத்திற்கு இதன் கண்ணியம் மற்றும் மேன்மைக்கேற்ப ஓர் உணர்வைக் கொடுத்திருக்கின்றான். அது உண்மை மற்றும் விசுவாசத்தின் உதாரணத்தைக் காட்டுகின்றது.

பிறகு அன்னார் தனது நூலான ஹகீகத்துல் வஹியில் தனக்காக வெளிப்பட்ட இறை அடையாளங்களைக் கூறும்போது 76வது அடையாளத்தில் கூறுகின்றார்கள். பராஹீனே அஹ்மதிய்யாவில் என்னைப் பற்றி இறைவனுடைய முன்னறிவிப்பு உள்ளது.

இறைவன் கூறுகின்றான்: நான் உனது அன்பினை மக்களது உள்ளங்களில் போடுவேன். மேலும் நான் எனது கண் பார்வையில் உன்னை வளர்ப்பேன்.

இது எந்த மனிதரும் என்னுடன் தொடர்பு கொண்டிராத போது இறங்கிய இல்ஹாம் ஆகும். பிறகு ஒரு காலக்கட்டத்திற்குப் பிறகு இந்த இல்ஹாம் நிறைவேறியது. மேலும் எனது அன்பினை உள்ளத்தில் நிரப்பிய ஆயிரக்கணக்கான மக்களை இறைவன் எனக்காக படைத்தான். அவர்களில் சிலர் உயிரினை அர்ப்பணித்தார்கள். சிலர் எனக்காக பொருளாதார இழப்பை சகித்துக் கொண்டார்கள். சிலர் எனக்காக தனது நாட்டை விட்டு விரட்டப்பட்டார்கள். கஷ்டம் கொடுக்கப்பட்டார்கள். துன்பம் இழைக்கப்பட்டார்கள். மேலும் ஆயிரக்கணக்கானோர் தனது நஃப்ஸின் தேவைகளை விட எனக்கு முன்னுரிமை வழங்கி தனது விருப்பமான செல்வங்களை எனது முன்னால் வைக்கிறார்கள்.

இங்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தனது ஒரு நேர்மையான ஒரு சஹாபி ஹஸ்ரத் செய்யது மீர் நாஸிர் ஷா சாஹிப் உடைய கடிதத்தைப் பற்றி கூறுகின்றார்கள்:

அவர் எழுதுகின்றார்: எனது மிகப்பெரிய ஆசை என்னவென்றால், மறுமையில் ஹுஸுருடைய நிழலில் இந்த பரக்கத் நிறைந்த ஜமாஅத்துடன் இப்போது எவ்வாறு இருக்கின்றேனோ அவ்வாறு இருக்க வேண்டும். ஹுஸுர்! அல்லாஹ் நன்கு அறிபவன் ஆவான். எனக்கு உங்களுடன் எந்த அளவு அன்பு உள்ளதென்றால் எனது எல்லா செல்வங்களும், எனது உயிரும் ஆகிய அனைத்தும் தங்களுக்கே அர்ப்பணமாகும். மேலும் ஆயிரம் உயிர்களுடன் உங்களுக்கு அர்ப்பணம் ஆவேன். எனது சகோதரர் எனது பெற்றோர்கள் தங்களுக்கே அர்ப்பணம்! இறைவன் எனது முடிவை தங்களுடைய அன்பு மற்றும் கட்டுப்படுவதில் ஏற்படுத்துவானாக! ஆமீன்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

நான் இந்த அளவு உண்மை மற்றும் உறுதியான எண்ணத்தில் அதிக அளவில் மக்களை ஜமாஅத்தில் பார்க்கும்போது என்னை அறியாமல் இவ்வாறு கூற வேண்டியது வருகிறது. "எல்லாம் வல்ல இறைவா! உண்மையில் ஒவ்வொரு அணுவிலும் கூட உனது வல்லமை உள்ளது. நீ தான் இவர்களது உள்ளங்களை கூச்சல் குழப்பம் நிறைந்த இந்த காலக்கட்டத்தில் எனது பக்கம் கொண்டு வந்தாய். மேலும் அவர்களுக்கு உறுதியான நிலைநிற்றலை வழங்கினாய். இது உனது மாபெரும் வல்லமை ஆகும்".

தற்போது நான், விசுவாசம், கொள்கைப்பிடிப்பு, அன்பு மற்றும் கட்டுப்படுதலில் நிரம்பியுள்ள சில தூயவர்களின் அறிவிப்புகளை எடுத்துரைப்பேன். சில விஷயங்களைப் பார்க்கும்போது சாதாரணமாக தெரியும். மிகவும் சின்னச்சின்ன விஷயங்களாகத் தென்படும். மனிதன், இது என்ன கட்டுப்படுதல்? இது சாதாரண விஷயம் எனக் கருதுவான். ஆனால் கட்டுப்படுதலுக்கான ஒவ்வொரு சம்பவத்திலும் ஒரு ஆழமான படிப்பினை உள்ளது. இந்த அன்பு மற்றும் விசுவாசத்தின் காரணமாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய சஹாபாக்கள் எவ்வாறு மகிழ்ச்சியுடன் முழுமையாக கட்டுப்பட்டார்கள். இவை அனைத்தும் நம் அனைவருக்கும் ஒரு முன்னுதாரணம் ஆகும். உண்மையில் இந்த உண்மையான கட்டுப்படுதல் மற்றும் தொடர்பு தான் பிறகு தக்வாவின் முன்னேற்றத்திற்கு வழிவகுக்கிறது.

**ஓய்வு பெற்ற ஹஸ்ரத் ஃபஸ்ல் இலாஹி சாஹிப் கூறுகின்றார்கள்:**

எனது பதவி உயர்வுக்கான கட்டளை அரசாங்கத்திடமிருந்து வந்தது. அதனை நான் ஹுஸுரிடம் எடுத்துரைத்தேன். ஹுஸுர் எனக்கு பதவி உயர்வு ஏற்பட்டுள்ளது. நான் இங்கிருந்து செல்கிறேன். எனது இடமாற்றமும் நடைபெற்று விடும் என்று கூறினேன். மக்கள் ஆயிரக்கணக்கான ரூபாய்களை செலவழித்து இங்கு (காதியானுக்கு) வருகிறார்கள். ஆனால் நீங்கள் பதவி உயர்வு கிடைத்து விட்டது என்பதனால் இங்கிருந்து செல்கிறீர்களா? இங்கேயே இருங்கள். நாம் உமது தேவைகளை நிறைவேற்றுவோம். அவர் கூறுகின்றார்: எனவே ஹுஸுரின் கூற்றிற்கேற்ப நான் இங்கிருந்து செல்வதை மறுத்து விட்டேன். பிறகு இங்கேயே இருந்தேன். பொருளாதார பலனை தியாகம் செய்து விட்டார்.

ஹஸ்ரத் முஃப்தி ஃபஸ்லூர் ரஹ்மான் சாஹிப் கூறுகின்றார்கள்: ஹுஸுர் (அலை) அவர்கள், வழக்கிற்கான தேதிகளில் குர்தாஸ்பூர் சென்று வருவார்கள். என்னை கண்டிப்பாக உடன் வைத்திருப்பார்கள். அந்தக் காலத்தில் குதிரை வண்டி தான் இருந்து வந்தது. அன்னார் காலையில் நடக்கச் செல்வதற்காக செல்லும் போது, ஃபஸ்லூர் ரஹ்மான் எங்கே? எனக் கேட்பார்கள். நான் இருந்தேன் என்றால் நான் உள்ளேன் என்று கூறுவேன். இல்லையென்றால் எனது வீட்டிற்கு ஆள் அனுப்பி என்னை சீக்கிரம் வரவழைப்பார்கள். ஹுஸுர் அவர்களின் குதிரை வண்டியை நான் எப்போதும் ஓட்டி வருவேன். குதிரை ஓட்டுபவனுக்கு அனுமதி கிடைக்காது. நான் குதிரை ஓட்டியின் இடத்தில் உட்கார்ந்து கொள்வேன். குதிரை வண்டியினுள் ஹுஸுர் அவர்கள் தனியாகத்தான் அமர்ந்திருப்பார்கள். இந்த நிலையில் எனது இரண்டாவது மகன் உடல் சுகவீனமடைந்தான். அதாவது இந்த வழக்குகள் தொடர்பான பயணங்கள் மேற்கொண்டிருக்கும் போது, குழந்தை உடல்நலம் சரியில்லாமல் போனது. அந்தக் குழந்தைக்கு டைபாய்டு ஏற்பட்டது. ஹுஸுர் அடிக்கடி அக்குழந்தையைப் பார்க்க வருவார்கள். வழக்கு நடைபெறும் தேதிக்கு ஒருநாள் முன்னதாக எனது மனைவி, ஹுஸுரிடம் துஆவிற்காக எழுதுங்கள் என்றாள். நான் கூறினேன். அன்னார் ஒவ்வொரு நாளும் குழந்தையைப் பார்ப்பதற்காக வரும்போது,

பிறகு எழுத வேண்டிய தேவை என்ன உள்ளது? ஆனால் அவள் என்னை வற்புறுத்தினாள். பிறகு நான் துஆவிற்கான விண்ணப்பத்தினை எழுதினேன். அதாவது கடிதம் எழுதி அனுப்பினேன்.

அதற்குப் பதிலாக ஹுஸுர் அவர்கள் நான் துஆ செய்வேன். ஆனால் தக்தீர் முப்ரமாக இருந்தால் அதை தவிர்க்க முடியாது என எழுதியிருந்தார்கள். இதனைப் படித்ததும் எனது கண்களில் கண்ணீர் வந்தது. எனது மனைவி ஏன் என கேட்டாள்? நான் கூறினேன். இந்தக் குழந்தை இனி நம்மிடம் இருக்க மாட்டான். ஒருவேளை இந்தக் குழந்தை குணமாக வேண்டியது இருந்தால் அன்னார் இவ்வாறு எழுதியிருக்க மாட்டார்கள். எவ்வாறிருப்பினும், மறுநாள் காலையில் பயணம் செல்ல வேண்டியதிருந்தது. அனைவரும் முச்சந்தியில் நின்றுகொண்டு, எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். ஹுஸுர் வந்தார்கள். எவரிடமும் எதுவும் பேசவில்லை. நேராக எனது வீட்டிற்கு வந்தார்கள். குழந்தையைப் பார்த்தார்கள். என்னிடம், நீர் இன்று இங்கேயே இருங்கள். நான் நாளை திரும்பி வந்து விடுவேன். குழந்தையின் நிலைமை மிகவும் மோசமாக உள்ளது என்றார்கள். எனவே நான் வீட்டிலேயே இருந்தேன். இந்த ஒரு பயணத்தை தவிர எல்லா பயணங்களிலும் நான் ஹுஸுர் அவர்களுடன் இருந்தேன். குழந்தையின் நிலைமை மோசமானதாக இருந்ததன் காரணமாக, ஒருநாள் அன்னாருடன் பயணம் மேற்கொள்ளாமல் போனதற்கான வருத்தம் மிகவும் தெளிவாகத் தெரிந்தது.

**மியான் நிஸாமுத்தீன் சாஹிபுடைய மகன் ஹஸ்ரத் ஹாஃபிஸ் அப்துல் அலி சாஹிப் கூறுகின்றார்கள்:**

ஓய்வு பெற்ற சிவில் சர்ஜன் ஹஸ்ரத் மீர் முஹம்மது இஸ்மாயீல் சாஹிபிடமிருந்து தெரிய வருவது என்னவென்றால், இவர் லாஹுர் மருத்துவக் கல்லூரியில் கல்வி பயில வந்த போது, ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் கூறினார்கள். நீங்கள் லாஹுரில் வீட்டில் தனியாக இருக்காதீர்கள். மாறாக, உங்களுடன் வேறொருவரையும் அழைத்துக் கொள்ளுங்கள் என்றார்கள். இந்த கூற்றிற்கிணங்க, மீர் சாஹிப் நான் பார்த்த வரையில், எந்த ஊரிலும் தனியாக இருந்ததில்லை. அப்போது மருத்துவக் கல்லூரியில் போர்டிங் வசதி இருந்ததில்லை. மீர் சாஹிப் வாடகைக்கு வீடு பிடித்து தனியாக வசித்து வந்தார்கள். பிறகு இதனை ஒரு நேரத்திற்காக இட்ட கட்டளை எனக் கருதாமல் இதனை நான் பார்த்த வரையில் வாழ்நாள் முழுவதும் கடைபிடித்தார்கள். எங்கேயாவது தங்க வேண்டியதிருந்தால் யாராவது தன்னுடன் கண்டிப்பாக தங்க வைத்திருப்பார்கள்.

**ஹஸ்ரத் அமீர் பக்ஸ் சாஹிபுடைய மகன் ஹஸ்ரத் மலக் ாதி கான் சாஹிப் கூறுகின்றார்கள்:**

ஒருமுறை நான், மியான் ஜமாலுத்தீன் சாஹிப் மர்ஹுமுடன் காதியான் வந்தேன். நாங்கள் வந்த போது மஸ்ஜித் முபாரக்கில் ளுஹர் நேரமாக இருந்தது. ஹுஸுர் அவர்கள் தொழுகைக்காக வந்தபோது, ஹுஸுரிடம் நான் முஸாபா செய்தேன். எனது காதுகளில் வளையம் போட்டிருந்தேன். அப்போது ஹுஸுர் அவர்கள், இது என்ன வளையம்? இதனை முஸ்லிம்கள் யாரும் அணிவதில்லையே? என்றார்கள். மியான் ஜமாலுத்தீன் சாஹிப், கிராமத்து மக்கள் அவ்வாறுதான் இருப்பார்கள். இப்படிப்பட்ட விஷயங்களைப் பற்றி அவர்களுக்கு தெரியாது என்றார்கள்.

பிறகு ஹுஸுர் கூறினார்கள்: அதனை காதுகளிலிருந்து கழற்றி விடுங்கள். மீர் நாஸிர் நவாப் சாஹிப் மர்ஹூம் கூறினார்கள். இதனை வேகமாக கழற்றுங்கள். ஏனென்றால், ஹுஸுர் அவர்கள் கட்டளையிட்டுள்ளார்கள் என்றார்கள். நான் அதனை உடனே கழற்றி விட்டேன். அஸர் நேரத்தில் தொழுகைக்காக வந்தபோது, ஹுஸுர் அவர்கள் இப்போதுதான் முஸ்லிமாகத் தென்படுகிறீர்கள் என்றார்கள். அதற்குப் பிறகு நான் பைஅத் செய்து விட்டேன். இதற்கு முன்பு அவர் பைஅத் செய்யவில்லை.

இன்றைய காலத்திலும் சில இளைஞர்கள் Fashion என்ற பெயரில் கிடைத்ததையெல்லாம் போட்டுக் கொள்கிறார்கள். சிலர் கழுத்துகளில் தங்கச் செயினை அணிந்துள்ளார்கள். இவையெல்லாம் தடுக்கப்பட்டதாகும். தங்கம் அணிவது பொதுவாகவே ஆண்களுக்கு தடுக்கப்பட்டவையாகும். இங்கும் சில சமயங்களில் சுற்றுப்புற தாக்கம் ஏற்பட்டு விடுகிறது. சில அஹ்மதி பையன்களும் இதுபோன்ற Fashion –களை கடைபிடிப்பதை நான் பார்த்துள்ளேன்.

**ஜனாப் அப்துர் ரஹீம் சாஹிப் பட்டி உடைய மகன் பஷீர் அஹ்மது சாஹிப் பட்டி உடைய தாயார் கூறுகின்றார்கள்:**

ஒருமுறை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தனது வீட்டில் சிறிதளவு உணவு தயார் செய்ய செய்தார்கள். அதாவது புலாவ் செய்தார்கள். பிறகு ஹுஸூருடைய கட்டளைக்கிணங்க ஹஸ்ரத் உம்முல் மூஃமினீன் அவர்கள் அப்போது காதியானில் எத்தனை அஹ்மதி வீடுகள் இருந்தனவோ அனைத்திற்கும் கொஞ்சம் கொஞ்சம் அனுப்பி வைத்தார்கள். இந்த சோறு பரக்கத் சோறு என்று அழைக்கப்படும். மேலும் வீட்டில் எத்தனை நபர்கள் உள்ளனரோ அனைவருக்கும் கொடுக்க வேண்டும் என கட்டளையிட்டிருந்தார்கள். அதாவது எந்தெந்த வீட்டிற்கெல்லாம் உணவு வந்ததோ அதனை வீட்டிலுள்ள அனைவரும் அதனை சாப்பிட வேண்டும்.

கூறுகின்றார்கள்: பஷீர் அஹ்மதுடைய தகப்பனார் அப்துர் ரஹீம் சாஹிப். இவர் இப்போது ஜம்முவில் பணியாற்றி வந்தார். கவரில் சில சோற்றுப்பருக்கைகளை பேப்பரில் வைத்து ஒட்டி தனது மகனுக்கு அனுப்பி வைத்தார்கள். ஏனென்றால் வீட்டிலுள்ளவர்கள் அனைவருக்கும் சோற்றைக் கொடுக்க வேண்டும் என்ற கட்டளை இருந்தது. இந்தக் கட்டளையை நிறைவேற்றுவதற்காக தனது மகன் வீட்டில் இல்லை. எனவே அவனுக்கு சில சோற்றுப் பருக்கைகளை கவரில் வைத்து ஒட்டி அனுப்பி, அத்துடன் கடிதத்தில் இந்தந்த மூலைகளில் சில பருக்கைகளை ஒட்டியிருக்கின்றோம். சாப்பிட்டுக் கொள் என எழுதியுள்ளார்கள். இதுதான் கட்டுப்படுதல் மற்றும் நேசம் ஆகும்.

**ஹஸ்ரத் மியான் அப்துல் கஃப்பார் சாஹிப் ஜராஹ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:**

ஹுஸூர் அவர்கள் கடைசியாக லாஹூர் சென்ற போது எனது தந்தையை, கடிதம் அனுப்பி வரவழைத்தார்கள். எனது தந்தை லாஹூர் சென்றடைந்ததும், காஜா கமாலுத்தீன் சாஹிப், மியான் குலாம் ரஸூல் இங்கு என்ன செய்கின்றார்கள்? எனக் கேட்டார்கள். அதாவது இங்கு ஏன் வந்துள்ளேன் என்றால், எனது தந்தை ஹுஸூரின் கடிதத்தை எடுத்துக்காட்டி கூறினார்கள். இந்த மனிதரிடம் கேளுங்கள். எவர் இந்த கடிதத்தை அனுப்பி என்னை வரவழைத்தாரோ அவரிடம் கேளுங்கள் என்றார். பிறகு ஹுஸூரை சந்தித்தார்கள். ஹுஸூருக்கு முடி வெட்டியவர்கள் மருதாணி இட்டார்கள். மேலும் காஜா சாஹிபின் கூற்றையும் ஹுஸூரிடம் கூறினார்கள்.

பிறகு ஹுஸூர் அவர்கள் ஒரு பேப்பரில் எழுதி எனது தந்தையிடம் கொடுத்தார்கள். அதனை எனது தந்தை கீழே போய் காண்பித்தார்கள். பிறகு அனைவரும் அமைதியாகி விட்டனர். யாரும் எதுவும் கூறவில்லை. பின்னர் ஹுஸூர் தனது அன்பினையும் வெளிப்படுத்தினார்கள். எனது தந்தைக்கு ஹுஸூர் அவர்கள் ஐந்து ரூபாய் கொடுத்தார்கள். மேலும் கூறினார்கள்: உங்களை நாம் தான் வரவழைத்தோம். நீங்கள் இவர்களுடைய கூற்றைப் பற்றி கவலையடையாதீர்கள். அதாவது அன்னாருடன் சஹாபாக்கள் கொண்ட அன்பின் உணர்வை விட அன்னார் சஹாபாக்களுடன் அதிக அளவு அன்புடன் பரிமாறி வந்தார்கள்.

**ஹஸ்ரத் ஷேக் ஜைனுல்லாபிதீன் சாஹிப் (ரலி) அறிவிப்பு செய்கின்றார்கள்:**

ஹாஃபிஸ் சாஹிப் காதியான் வந்தபொழுது ஹுக்கா அதிகமாக குடித்து வந்தார்கள். மறைந்து மறைந்து சென்று மியான் நிஸாமுத்தீன் சாஹிப் வீட்டிற்குச் சென்று குடித்து வந்தார்கள். இவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது உறவினராக இருந்தாலும், அன்னாருடைய மிகப்பெரிய எதிரிகள் ஆவார்கள். ஹுஸூருக்கும் இது தெரிய வந்தது. பிறகு கூறினார்கள்: மியான் ஹாமித் அலி, இந்த பைசாவை வாங்கிக் கொண்டு பஜாரிலிருந்து ஒரு ஹுக்கா வாங்கி வாருங்கள். புகையிலையையும் வாங்கி வாருங்கள். தேவைப்படும் போது அதனை வீட்டிலேயே வைத்து குடித்துக் கொள்ளுங்கள். இவர்களிடம் செல்லாதீர்கள். ஏனென்றால் இவர்கள் இஸ்லாத்திற்கு எதிரானவர்கள் ஆவார்கள். இந்த வகையில் அவர் ஹுக்கா வாங்கி வந்து குடித்து வந்தார். விருந்தினர்களும் அதே ஹுக்காவை குடித்து வந்தனர். ஆறு அல்லது ஏழு மாதங்களுக்குப் பிறகு ஹுஸூர் அவர்கள் மியான் ஹாமித் அலி இந்த ஹுக்காவை விட்டு விட்டீர்கள் என்றால் எவ்வளவு நல்லதாக இருக்கும் என்று கூறினார்கள். அதற்கு ஹாமித் சாஹிப், சரி ஹுஸூர்! என்று கூறியவாறு உடனேயே ஹுக்கா குடிப்பதனை நிறுத்தி விட்டார்.

முதலில் தீய நட்பிலிருந்து காப்பாற்றுவதற்கு தற்காலிகமான திட்டம் ஒன்றை ஏற்படுத்தி, தற்காலிகமான ஒரு ஏற்பாட்டினை ஏற்படுத்திச் சென்று தனக்கென்று ஹுக்கா வாங்கி வந்து வீட்டிலேயே குடிக்குமாறும், ஒரு குறிப்பிட்ட காலம் சென்ற பிறகு, இது உடல் ஆரோக்கியத்திற்கு தீங்கு விளைவிக்கக்கூடிய மோசமான நிலையை ஏற்படுத்தி விடக்கூடாது எனக்கூறி இதனை விடுவது சிறந்ததாகும் என்று கூறினார்கள். இதிலிருந்து எவரும் ஒரு தடவை அனுமதிக்கப்பட்டதனால் இது ஆகுமானது என எவரும் கருதக் கூடாது. சிகரெட் பிடித்தல் போன்றவை பொதுவாக கெட்ட பழக்கங்களாகும். இதனை விடுவது மிகச் சிறந்ததாகும்.

**இதனைப் பற்றி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்:**

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களது காலத்தில் புகையிலை போன்றவைகள் இருந்திருந்தால், நிச்சயமாக இதனை தடை செய்து இருந்திருப்பார்கள்.

**ஹஸ்ரத் மலக் குலாம் ஹுஸைன் சாஹிப் முஹாஜிர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:**

ஒரு சேட் சாஹிபைப் பற்றி கூறியவாறு கூறுகின்றார்கள். நான் வந்த போது ஹுஸுர் அவர்கள் என்னை அழைத்து வர கூறினார்கள். மியான் குலாம் ஹுஸைன், சேட் சாஹிபிற்கு சேவை செய்வதற்காக, பீரா மியான் கரம்தாத் –ஐ நியமித்திருக்கின்றேன். ஆனால் அவர்கள் வெகுளியான மக்களை போன்றவர்கள் ஆவார். எனவே நீங்களும் கவனத்தில் கொள்ளுங்கள். பீராவுடைய வேலை அவர் பஜாரிலிருந்து சாமான்களை வாங்கி வருவதாகும். ஏனென்றால், அவர் ஹுக்கா குடிப்பவராக இருந்தார். கரம்தாத் அதனை புதுப்பிக்கச் செய்வார். என்னை ஹுஸுர் அவர்கள் இவர்கள் இருவரையும் கவனிப்பதற்காக நியமித்தார்கள். மேலும் நீங்களும் நல்ல முறையில் இவரை கவனித்துக் கொள்ளுங்கள். மிகவும் கண்ணியத்திற்குரியவர் ஆவார். மிகவும் தொலைவில் இருந்து பல இன்னல்களை மேற்கொண்டு வந்துள்ளார்கள் என்றார்கள். சேட் சாஹிப் என்னிடம் மியான் குலாம் ஹுஸைன் குளிர்ந்த தண்ணீர் வேண்டும் எனக் கூறி வந்தார்கள். உடனே நான் ஓடிப்போய் பெரிய பள்ளிவாசலிலிருந்து சுத்தமான தண்ணீரை கொண்டு வருவேன். அவர்களுக்கு உணவும் உள்ளிருந்தே தயார் செய்து எடுத்து வந்தேன். நானே அவர்களுக்கு விநியோகம் செய்து வந்தேன். அவர் ஏறக்குறைய ஒரு மாதத்திலிருந்து ஒன்றரை மாதம் வரை தங்கி வந்தார். ஹுஸுர் அவர்கள் அவ்வப்போது என்னிடம், சேட் சாஹிபைப் பற்றி அவருக்கு எந்த விதமான கஷ்டமும் இல்லையே எனக் கேட்டு வந்தார்கள். ஒருமுறை பள்ளிவாசலில் ஹுஸுர் அவர்கள் சிரித்தவாறு சேட் சாஹிபிடம், சேட் சாஹிப் ஏதாவது கஷ்டம் இருக்கிறதா? எனக் கேட்டார்கள். அதற்கு அவர் எந்தக் கஷ்டமும் இல்லை எனக் கூறினார். மியான் குலாம் ஹுஸைன் தண்ணீர் கூட பள்ளிவாசலிலிருந்து கொண்டு வந்து தருகிறார்கள் என்றார். ஹுஸுர் அவர்கள், சேட் சாஹிபை வழி அனுப்புவதற்கு தாருஸ் ஸெஹத் வரை சென்று வருவார்கள். ஹுஸுர் திரும்பி வரும் போது என்னையும் பீராதத்தா, கரம் தாதுவையும் அழைத்து இரண்டிரண்டு ரூபாயை அன்பளிப்பாகவும் கொடுத்து வந்தார்கள். இவர்கள் இருவருக்கும் இரண்டு இரண்டு ரூபாயும், எனக்கு ஐந்து ரூபாயும் அன்பளிப்பாக கொடுத்து வந்தார்கள். விருந்தினர்களுக்கு சேவை செய்வது மற்றும் விருந்தினர்களுக்கு கண்ணியம் அளிப்பது போன்றவற்றை ஹுஸுருடைய கட்டளைக்கேற்ப அதனை செய்து வந்தார்கள். மேலும் விருந்தினர்களுக்கு விருந்து உபச்சாரம் செய்வது பொதுவான கட்டளையாகும்.

ஆனால் இங்கு மேலும் ஒரு கடமையாக ஆகி விட்டது. ஒன்று, சேவைக்கான நன்மை பெறுவது, மற்றொன்று அன்பு மற்றும் கட்டுப்படுதலை வெளிப்படுத்துவதற்கான கடமையை நிறைவேற்றுவது ஆகும்.

**ஹஸ்ரத் மவ்லவி அஸீஸுத்தீன் சாஹிப் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:**

ஒருமுறை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள், லாஹுரில் பணியாற்றி வந்த முஃப்தி முஹம்மது சாதிக் சாஹிப் அவர்கள் காலையில் செல்வதற்காக அனுமதி கேட்டார்கள். ஹுஸுர் அவர்களை போக வேண்டாம் எனக் கூறினார்கள். இங்கே இருங்கள் என்றார்கள். பிறகு முஃப்தி சாஹிப் மதிய வேளையில் அன்னாரிடம், பணி செய்யக்கூடிய நேரமாக இருப்பதால், இன்று செல்வது அவசியமாகும் என்றார்கள். மேலும் தற்போது நேரமும் கடந்து விட்டது என்றார்கள். ஹுஸுர் கூறினார்கள்: நேரத்தைப் பற்றி கவலைப்படாதீர்கள். நீங்கள் இப்போது செல்லுங்கள் இன்ஷா அல்லாஹ் கண்டிப்பாக சென்றடைந்து விடுவீர்கள். முஃப்தி சாஹிப் பட்டாலாவை நோக்கி

பயணம் செய்ய ஆரம்பித்தார்கள். நானும் அவர்களுடன் பட்டாலா சென்றேன். நேரம் 4.00 மணி ஆனது. இந்த நாட்களில் பட்டாலாவிலிருந்து லாஹூருக்கு 2.00 மணிக்கு சென்று வந்திருந்தது. அனைவரும் கவலையடைந்து இருந்தோம். ஆனால் ஸ்டேசன் சென்றடைந்ததும் வண்டி 2.00 மணி நேரம் தாமதம் என தெரிய வந்தது. பிறகு அந்த வண்டி வந்தது. நாங்கள் அதில் ஏறி லாஹூரை நோக்கி பயணம் செய்தோம். இது மாநாட்டின் நாட்களில் நிகழ்ந்த சம்பவம் அல்ல. வேறு நாட்களில் நடந்ததாகும்.

**ஹஸ்ரத் மியான் அப்துல் லத்தீஃப் சாஹிப் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:**

மியான் சிராக் தீன் சாஹிப் கூறி வந்தார்கள். ஒருமுறை ஞாயிற்றுக்கிழமை ஹுஸூரிடம், நான் அலுவலகத்திற்கு செல்ல வேண்டும் என அனுமதி கேட்டேன். பொதுவாக ஹுஸூர் அவர்கள் அனுமதி வழங்கி வந்தார்கள். ஆனால் அன்றைய தினம் அனுமதி தரவில்லை. திங்கட்கிழமை காலையில் எனக்கு அனுமதி வழங்கினார்கள்.

இங்கிருந்து 11.00 மணிக்கு வண்டியில் பயணம் செய்து 3.00 மணிக்கு லாஹூர் சென்றடைந்தேன். பிறகு இரு சக்கர வாகனத்தில் பயணம் செய்து 3.30 மணிக்கு அலுவலகம் சென்றேன். நாற்காலியில் உட்காரத்தான் செய்தேன். இங்கு அல்லாஹ், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு கட்டுப்பட்டதின் விளைவாக எப்படிப்பட்ட அற்புதங்களை வெளிப்படுத்தினான் என்பதை பாருங்கள். நாற்காலியில் உட்கார்ந்ததும் அலுவலகத்திலுள்ள ஒரு கிளர்க் வந்தான். 11.00 மணிக்கு உங்களிடம் ஒரு காகிதம் தந்தேன். அந்த வேலையை செய்தீர்களா? இல்லையா? ஆனால் இவர்கள் சென்றடைந்ததோ 3.00 மணிக்கு தான். பிறகு ஒரு மேலதிகாரி வந்தார். அவர் சிராக் தீன், நீங்கள் 11.00 மணிக்கு கொடுத்த கடிதத்தின் பதில் இதுவாகும் என்று கூறினார்கள். அல்லாஹ் எப்படிப்பட்ட ஏற்பாட்டைச் செய்துள்ளான் என்றால் அந்த மேலதிகாரியிடம் யாரெல்லாம் கடிதம் கொண்டு போனார்களோ, அதை மேலதிகாரி, சிராக் தீன் தான் கொண்டு வந்தார் என நினைத்தார்கள். எவ்வாறிருப்பினும் அல்லாஹ்வுடைய மலக்குமார்கள் இந்த வேலையைச் செய்துள்ளனர்.

இது அதற்குரிய பதிலாகும் என்றார். கூறுகின்றார்கள்: அலுவலகத்திலுள்ள ஒவ்வொருவரும் நான் அலுவலகத்தினுள் தான் இருந்திருக்கின்றேன் என நம்பினார்கள். பிறகு மாலை 4.00 மணிக்கு நான் அலுவலகத்திலிருந்து வீடு திரும்பினேன். இதுவும் கட்டுப்படுதல் மற்றும் அல்லாஹ் சஹாபாக்களிடம் கொண்டிருந்த நடைமுறைக்கு இது ஒரு உதாரணம் ஆகும்.

**ஹஸ்ரத் மீர் மெஹ்தி ஹசன் சாஹிப் அறிவிக்கின்றார்கள்:**

ஹுஸூர் அவர்கள் என்னை அழைத்து, எனக்கு கட்டளையிட்டார்கள். நமது லங்கரில் எரிபொருள் இல்லை. நீங்கள் கிராமத்திலிருந்து காய்ந்த விறகுகளை வாங்கி மாலைக்குள் வந்து விடுங்கள். ஏனென்றால், நாளைக்கென்று நமது லங்கரில் எரிபொருள் இல்லை எனக் கூறினார்கள். என்னிடம் விலைக்கு வாங்குவதற்காக 4 ரூபாய் கொடுத்தார்கள். நான் அந்த ரூபாயை வாங்கிக் கொண்டு நேராக மஸ்ஜித் முபாரக் உடைய மாடிக்கு ஏறினேன். மஸ்ஜிதை விட்டு தனித்து நிற்கும் தற்போதுள்ள மினாரின் அருகில் நின்று துஆ செய்தேன்.

இறைவா! உனது மஸீஹ் எனக்கு ஒரு பணியை செய்யக் கட்டளையிட்டுள்ளார்கள். ஆனால் நான் இதனைப் பற்றி ஒன்றும் அறியாதவன் ஆவேன். எனக்கு ஒரு திசையைக் காட்டுவாயாக! அதன் மூலம் நான் விறகுகளை வாங்கிக் கொண்டு மாலைக்குள் இங்கு வந்துவிட வேண்டும் என்றேன். எனக்கு மினராவின் கொஞ்ச உயரத்திலிருந்து பாலைவனம் இருக்கிறது என்று சப்தம் கேட்டது. நான் எனது கால்களின் காயங்கள் காரணமாக அல்லாஹ் என்னை செல்வதிலிருந்து தடுத்திருக்கின்றான் என நினைத்தேன். பிறகு மீண்டும் இறைவனிடம் வேண்டினேன்.

நான் நொண்டி நொண்டியாவது சென்று விடுவேன். ஆனால் உனது மஸீஹ் உடைய கட்டளையை மாலைக்குள் நிறைவேற்றி விட வேண்டும். மீண்டும் பதில் வந்தது. இங்கேயே வந்து விடும். எங்கும் செல்வதற்கு தேவையில்லை. நான் சஜ்தா ஷுக்ர் செய்தேன். இதுபோன்று தான் மஸீஹ் உடைய வேலைகள் நடக்கும் என்றேன். அப்போதுதான் உலகத்தை வெல்ல முடியும். நான் அந்த இடத்திலேயே அமர்ந்திருந்தேன். மேலும் என் இறைவா! எனக்கு மாலையில் மஸீஹிடம் வெட்கப்படக் கூடிய நிலை வந்து விடக்கூடாது என துஆ செய்து கொண்டிருந்தேன். மீண்டும் உள்ளத்தில் தோன்றியது. எனது இல்ஹாம் உடனேயே வெளிப்படுவதற்கு நான் ஒரு

நபியோ, வலியோ கிடையாது. நான் எங்கேயாவது செல்ல வேண்டும். பிறகு உள்ளத்தில் தோன்றியது. ஒருவர் மற்றவரை விருந்திற்கு அழைத்தால், மாலையில் எங்கள் வீட்டில் உணவருந்துங்கள் என்றால் அவர் மறுக்கமாட்டார். நான் இறைவனுடைய வாக்குறுதியில் நம்பிக்கை வைக்க வேண்டும். அவன் கண்டிப்பாக இங்கு எரிபொருளை கொண்டு வந்து சேர்ப்பான். இதில் நிம்மதி அடைந்தவாறு நான் பள்ளிவாசலின் மாடியில் உட்கார்ந்தே இருந்தேன். ளுஹர் நேரம் நெருங்கியது. கீழே இறங்கிய போது ஹுஸூர் அவர்கள் ரூபாய் கொடுக்கும் போது பார்த்த ஒரு பணிப்பெண், நீ இதுவரை எரிபொருள் வாங்கச் செல்லவில்லையா? என்றாள். நான் உள்ளத்தில் எண்ணினேன். இவள் ஹுஸூரிடம் தான் வேலை செய்கிறாள். எனவே ஹுஸூருக்கு இல்ஹாம் இறங்குவதும் முழுமையடைவதும் இவளுக்கு தெரியும் என எண்ணி, நான் அவளிடம் கூறினேன். கவலையடைய வேண்டியதில்லை. இறைவன் எனக்கு இல்ஹாம் இறக்கியிருக்கிறான். எரிபொருள் இங்கே வந்து விடும். அதற்கு அவள் கோபம் அடைந்தவாறு கூறினாள். எனக்கு இல்ஹாம் வராத வரை நான் எங்கும் செல்ல மாட்டேன் என்று கூறுகிறீரா? என்றாள். நான் இப்போதே சென்று ஹுஸூரிடம் இதனை கூறுகிறேன் என்றாள். இந்த விசயத்தை அந்த பணிப்பெண் வேறு விதமாக புரிந்து கொண்டாள். மேலும் அவள் சென்று ஹுஸூரிடம், இதனை கூறி விட்டாள். எவ்வளவு தடுத்தும் கூட கேட்காமல் ஹுஸூரிடம் சென்று கூறினாள். எனக்கு இல்ஹாம் வராத வரை நான் எங்கேயும் செல்ல மாட்டேன் என்கிறார். பிறகு என்னை ஹுஸூர் அவர்கள் அழைத்து விசாரிப்பார்கள் என நினைத்தேன். பிறகு எனது இல்ஹாமை தெரியப்படுத்த வேண்டியது வரும். ஒரு பிச்சைக்காரன் மாபெரும் மன்னனிடம் நானும் வசதிபடைத்தவன் தான் என்று எவ்வாறு கூற முடியும்? அதாவது ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களுக்கு இல்ஹாம்கள் இறங்குகின்றன. பிறகு நான் எனக்கு இல்ஹாம் இறங்கியது என எவ்வாறு கூற முடியும்? எனவே பள்ளிவாசலின் படிகளிலிருந்து இறங்கி பட்டாலா வழியை நோக்கி ஓடினேன். பின்னால் திரும்பிப் பார்த்தேன். என்னை கூப்பிடுவதற்கு யாராவது வந்துள்ளார்களா என பார்த்தேன். பிறகு சிறிது தூரம் சென்ற பிறகு நான், சேக்வான் சென்று எரிபொருளை தேட வேண்டும் உறுதி கொண்டேன். மவ்லவி இமாமுத்தீன் மற்றும் மவ்லவி கையிருத்தீன் அவர்களை உதவிக்கு அழைத்துக் கொண்டு இந்த வேலை செய்ய வேண்டும் என நினைத்தேன். சிறிது தூரம் சென்ற பிறகு மீண்டும் எனக்கு சிந்தனை தோன்றியது. இறைவனது கட்டளை, இங்கு வந்துவிடும் என்பதாகும். ஆனால் நான் வெளியே சென்று விட்டால், மேலும் ரூபாயும் என்னிடம் தான் உள்ளது. பிறகு இந்தப் பணி எவ்வாறு நடக்கும்? எனவே நான் திரும்பி வந்து மீண்டும் பள்ளிவாசலின் மாடியில் உட்கார்ந்து கொண்டேன். இறைவன் தனது வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டும் என துஆ செய்து கொண்டிருந்தேன்.

மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களது பணிப்பெண் பீரா தத்தா ஆவாள். இவள் பஹாடியா என்று அழைக்கப்பட்டாள். விறகு வாசலருகே வந்துள்ளது. போய் வாங்கிக் கொள் என குரல் கொடுத்தாள். நான் சஜ்தா ஷுக்ர் செய்தேன். பிறகு கீழே சென்று பார்த்தேன். அதில் 1 கட்டு விறகாகவும் குச்சிகளாகவும் இருந்தன. இதனை வாங்குவதற்காக 12 பேர் கூடியிருந்தனர். இதில் ஒவ்வொருவரும் இரண்டு அனா கூட்டிக் கொண்டே விலைபேசிக் கொண்டிருந்தனர். 1 ரூபாய் 12 அனா வரைக்கும் விலை கேட்கப்பட்டது. மியான் நஜ்முத்தீன் சாஹிப் 2 அனாக்கள் அதிகரித்து வாங்க முற்பட்டார்கள். நான் ஒரு குரல் கொடுத்தேன். இதில் எத்தனை விறகுகள் உள்ளன? கட்டை அங்கும் இங்குமாக புரட்டிப் பார்த்து இதில் 1 ரூபாய் 12 அனாக்களை விட அதிகமாக 1 அனா கொடுக்கிற அளவுக்கு விறகுகள் இல்லை என நான் கூறினேன். யாருக்கு விருப்பமோ அவர் வாங்கட்டும் என்றேன். இதனைக் கூறி விட்டு நான் வந்து விட்டேன். ஆனால் உள்ளத்தில் இறைவா! உனது அருள் இல்லாமல் இது எனக்கு கிடைக்கப் பெறாது என துஆ செய்தேன். நான் வந்தவுடன் வாங்க வந்த அனைவரும் பிரிந்து சென்று விட்டனர். பீரா தத்தா அங்கே நின்றிருந்தாள். யாருமே வாங்கவில்லை என்பதால் விறகுக்காரன் ஆச்சரியப்பட்டான். அப்போது பீரா தத்தா கூறினாள். நீ என்னுடன் விறகுக் கட்டுகளை எடுத்துக் கொண்டு வா. நான் உனக்கு 1 ரூபாய் 12 அனாவுக்கு இதனை விற்றுத் தருவேன் என்றாள். விறகுக்காரன் அவளுடன் சென்றான். நான் அப்போது மஸ்ஜிது முபாரக்கில் துஆ செய்து கொண்டிருந்தேன். பீரா தத்தா கூறினாள். விறகுக்கட்டு வந்து விட்டது. இதனை எடுத்து வையுங்கள் என்றாள். பிறகு விறகு கட்டை லங்கர்கானா கொண்டு சேர்த்த பிறகு நான் ஹுஸூரிடம் அன்னாரின் கட்டளைக்கேற்ப அமல் செய்யப்பட்டது என்பதை தெரியப்படுத்த விரும்பினேன். ஆனால் உள்ளத்தில் மீண்டும் எண்ணம் தோன்றியது. இது என்ன வேலை? இதனைப் பற்றி தெரியப்படுத்துவதற்கு என்ன அவசியம் இருக்கின்றது? இறைவன் தானாகவே ஹுஸூருக்கு தெரியப்படுத்தி விடுவான். நான் தெரியப்படுத்த வேண்டிய அவசியம் இல்லை.

காலையில் ஹுஸுர் அவர்கள் நடப்பதற்காக சென்றார்கள். நீரோடை அருகே பீர் சாஹிப் செப்பனிட்ட தனது சாலைகளை பார்வையிட்ட பிறகு, ஒரு நகைச்சுவைக்காக ஹுஸுர் அவர்கள் கூறினார்கள். இங்கு ஒரு மெஹ்தி ஹசன் வந்துள்ளார். அவரிடம் நாம் எரிபொருள் வாங்கி வரக் கூறினோம். ஆனால் அவர் கூறுகிறார். எப்போது வரை எனக்கு இல்ஹாம் இறங்காதோ அப்போது வரை வேலை செய்யமாட்டேன் என்கிறார். அந்தப் பணிப்பெண் கூறியது போன்று கூறினார்கள். இதனைக்கேட்ட அனைவரும் சிரித்தார்கள். எவ்வாறிருப்பினும் அல்லாஹ்வின் செயல்பாட்டைப் பாருங்கள். அவருக்கு சில நிர்பந்தங்கள் இருந்தன. அல்லாஹ்வும் தனது இருப்பிற்கு சான்றளிக்க வேண்டியதும் இருந்தது. எவ்வாறிருப்பினும் இவரது துஆ ஏற்றுக் கொள்ளப்பட்டது. அனைத்து ஏற்பாடுகளும் நடைபெற்றன.

**ஹஸ்ரத் மவ்லானா குலாம் ரஸுல் சாஹிப் ராஜிகி அறிவிக்கின்றார்கள்:**

ஒருமுறை நான் தாருல் அமானில் தான் இருந்தேன். ஏறக்குறைய இது 1905-ல் நடைபெற்ற சம்பவமாகும். கான் முஹம்மது அக்பர் கான் உடைய மூத்த மகன் மியான் அப்துல் ஹமீது கான் சாஹிப் கபூர்தல்வி ஆவார். மியான் முஹம்மது கான் சாஹிபைப் பற்றி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தனது நூலான இஸாலே அவ்ஹாமில் குறிப்பிட்ட வார்த்தைகளில் எழுதியுள்ளார்கள்.

கான் அப்துல் ஹமீது கான் சாஹிப் என்னிடம் கூறினார்கள். நீங்கள் கபூர்தலா வாருங்கள். அங்கு சில நாட்கள் தர்ஸ் மற்றும் தப்லீக் பணி செய்வதற்காக தங்குங்கள் என்றார். நான் தாருல் அமானில் தான் தங்குவேன் என்றேன். திரும்பிப் போவதாக இருந்தால் எனது ஊருக்கு தான் செல்வேன் என்றேன். அதற்கு நான் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் விண்ணப்பம் எழுதி உங்களுடைய பெயரில் கட்டளை பிறப்பிக்க செய்தாலுமா நீங்கள் என்னுடன் செல்லமாட்டீர்கள்? பிறகு நான் செல்லாமல் இருப்பேனா? எனக் கூறினேன். நான் கண்டிப்பாக செல்ல வேண்டியது இருக்கும். எனவே அவர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு ஒரு கடிதம் எழுதினார். அதில் மவ்லவி குலாம் ரஸுல் ராஜிகிக்கு என்னுடன் கபூர்தலா சென்று அங்கு தர்ஸ் மற்றும் தப்லீக் பணிகளை செய்வதற்காக சிறிது காலம் தங்குவதற்கு கட்டளை பிறப்பிக்குமாறு வேண்டுகிறேன் என எழுதியிருந்தார். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இந்த விண்ணப்பத்திற்கு பதிலில் அவர் செல்லலாம் என்றார்கள். அவருக்கு அனுமதி உண்டு என்று ஒருவர் மூலம் சொல்லி அனுப்பினார்கள். பிறகு நான் அவர்களுடன் கபூர்தலா சென்றேன். அங்கு ஆறு மாதங்கள் வரை தர்ஸ் மற்றும் தப்லீக் பணிகளைச் செய்து வந்தேன். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய அனுமதி மற்றும் கூற்றிற்கேற்ப இது எனது முதல் சந்தர்ப்பம் ஆகும். இதில் முழுமையாக இஸ்லாத்தின் சேவைக்காக பயணம் செய்தேன்.

**ஹஸ்ரத் மியான் கையருத்தீன் சாஹிப் கூறுகின்றார்கள்:**

கரம்தீன் வழக்கில் நான் குர்தாஸ்பூரில் இருந்தேன். மக்ரிப் நேரமாக இருந்தது. ஹுஸுர் அவர்கள், ரோஸ்தீன் சாஹிப் டஸ்கவி இன்னும் வரவில்லையா என்றார்கள். ஏனென்றால், அவர்கள் காலையில் சாட்சி கூற வேண்டியதிருந்தது. அவர் அஹ்மதி கிடையாது. ஆனால் தூய மனிதராவார். பிறகு ஹுஸுர் அவர்கள் மவ்லவி சாஹிபிடம் மவ்லவி நூர் அஹ்மது லோத்தி நங்கல்வாளவை தெரிந்த மனிதர் இருந்தால் கூப்பிடுங்கள் என்றார்கள். நான் வந்தேன். ஹுஸுர் எனக்கு நாளை காலை 9.00 மணிக்குள் அவரை உங்களுடன் அழைத்து வாருங்கள் என்றார்கள். நான் இரவோடு இரவாக சென்றடைந்தேன். இரவில் வயலின் பாத்தியில் தங்கினேன். காலையில் கிராமத்திற்குள் சென்றேன். மவ்லவி சாஹிப் தொழுகைக்குப் பிறகு மாணவர்களுக்கு பாடம் கற்றுக் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். என்னைப் பார்த்ததும் தூரத்திலிருந்து எனது சுகத்தைக் கேட்டறிந்தார்கள். நீங்கள் எங்கிருந்து வந்துள்ளீர்கள் என்றார்கள். நான் குர்தாஸ்பூரிலிருந்து வந்துள்ளேன். ஹுஸுர் அவர்கள் உங்களை அழைத்து வர சொன்னார்கள் என்றேன். மவ்லவி சாஹிப் உடனேயே புத்தகத்தை மூடினார்கள். மேலும் இந்த வசனத்தை ஓதினார்கள்.

*நம்பிக்கை கொண்டவர்களே! அல்லாஹ்வின் தூதர் உங்களுக்கு உயிர் கொடுப்பதற்காக அழைத்தால் நீங்கள் அல்லாஹ்வுக்கும் தூதருக்கும் பதில் அளியுங்கள். (8:25)*

மவ்லவி சாஹிப் வீட்டிற்கு கூட செல்லவில்லை. நேராக என்னுடன் செல்ல ஆரம்பித்தார்கள். காலை 9.00 மணி அளவில் நாங்கள் வந்தடைந்தோம்.

**ஹஸ்ரத் கலீஃபா நூருத்தீன் சாஹிப் ஜம்முவைச் சார்ந்தவர் கூறுகின்றார்கள்:**

ஊரில் சுற்றுப்பயணம் செய்யும் பணியில் இருந்தேன். எங்கு சென்றாலும் அங்குள்ள மக்களிடம் கபர்களைப் பற்றி கேள்வி கேட்டேன். மேலும் சில விஷயங்களை சேகரிப்பேன். சில சமயங்களில் இதனைப் பற்றி சில குறிப்புகளை ஹஸ்ரத் ஹக்கீம் நூருத்தீன் சாஹிப் அதாவது முதல் கலீஃபத்தல் மஸீஹ் அவர்களிடம் தெரிவிப்பேன் என்கிறார்.

ஒருமுறை நான் கான்யார் வீதிகளில் சென்று கொண்டிருந்தேன். ஒரு கபரின் அருகில் ஒரு வயதான தாத்தாவும், பாட்டியும் உட்கார்ந்திருப்பதைக் கண்டேன். நான் அவர்களிடம் இது யாருடைய கபர்? என்று கேட்டேன். அதற்கு அவர்கள் இது ஒரு நபி சாஹிபுடையதாகும். இந்த கபர் யூஸே ஆஸப் நபி என்ற பெயரில் பிரபல்யமாக இருந்தது. இங்கு நபி எங்கிருந்து வந்தார்? எனக் கேட்டேன். அதற்கு அவர்கள் இந்த நபி மிகவும் தொலைவில் இருந்து பல நூறு ஆண்டுகளுக்கு முன்பு வந்தார் என்றார்கள். மேலும் அவர்கள் கூறினார்கள். உண்மையான கபர் கீழே இருக்கிறது. அதில் ஒரு ஓட்டை இருந்தது. அதிலிருந்து வாசனை வந்து கொண்டிருந்தது. ஆனால் ஒரு வெள்ளத்தினால் தண்ணீர் வந்த பிறகு அந்த வாசனை வருவது நின்று விட்டது.

நான் இந்த விஷயங்களையும் மவ்லவி சாஹிபிடம் அதாவது முதல் கலீஃபத்துல் மஸீஹ் அவர்களிடம் கூறினேன். இந்த சம்பவம் நடந்த சில காலங்களுக்குப் பிறகு மவ்லவி சாஹிப் வேலையை விட்டு விட்டு காதியான் வந்து விட்டார்கள். ஒருநாள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய சபையில் மவ்லவி சாஹிபும் இருந்தார்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்: எனக்கு, அவ்விருவருக்கும் தங்குவதற்கேற்றதும் நீரூற்றுகளைக் கொண்டதுமான ஓர் உயர்ந்த இடத்தில் தஞ்சமளித்தோம் (23:51) என்ற வசனத்திலிருந்து தெரிய வருவதென்றால், சிலுவை சம்பவத்திற்கு ஹஸ்ரத் ஈஸா நபி (அலை) அவர்கள் காஷ்மீர் போன்ற ஓரிடத்திற்கு தான் சென்றிருக்க வேண்டும். அப்போது முதல் கலீஃபா அவர்கள் கான்யாரில் கபர் சம்பந்தப்பட்ட எனது அறிவிப்புகளை கூறினார்கள். ஹுஸூர் அவர்கள் என்னை அழைத்தார்கள். மேலும் இதில் ஆராய்ச்சி செய்ய எனக்கு கட்டளையிட்டார்கள். எனவே நான் மேலும் அதிகமாக சுற்றுப்பயணம் செய்து, காஷ்மீர் முழுவதும் சுற்றித்திரிந்து, 560 உலமாக்களிடம் இதனைப் பற்றி கையொப்பம் வாங்கி ஹுஸூரிடம் சமர்ப்பித்தேன். ஹுஸூர் அவர்கள் மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டார்கள்.

**ஹஸ்ரத் சையத் தாஜ் ஹுஸைன் புகாரி சாஹிப் அறிவிக்கின்றார்கள்:**

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் சியால்கோட்டில் மீர் ஹாமிது ஷா சாஹிப் வீட்டில் தங்கியிருந்தபோது, நான் எனது பாட்டனார் ஹஸ்ரத் சையது அமீர் அலி ஷா சாஹிபுடன் சென்றடைந்தேன். ஹுஸூர் அவர்கள் எங்களிடம் பைஅத் வாங்கினார்கள். மேலும் என்னிடம் காதியான் வந்து படியுங்கள். நீங்கள் வளைகுடா நாட்டின் மணிமகுடம் ஆவீர்கள் என்றார்கள். எனவே நான் 1906 ம் ஆண்டு காதியானில், தஃலீமுல் இஸ்லாம் உயர்நிலைப்பள்ளியில் சேர்ந்தேன். மேலும் அதிகமாக ஹுஸூரை சந்தித்து வந்தேன். பலமுறை நடைபயிற்சியிலும் கலந்து கொண்டுள்ளேன்.

**ஹஸ்ரத் மியான் சோனே கான் சாஹிப் அறிவிக்கின்றார்கள்:**

ஏறக்குறைய 1899 –ல் பட்டியாலா பகுதியில் பாதுகாப்புத் துறையில் வேலைக்குச் சேர்ந்தேன். நான் அளவீட்டாளராக பணியாற்றினேன். ஷேக் ஹாஷிம் அலி சனோரி அவர்கள் சட்டவல்லுனராக இருந்தார். எங்களது வேலைகளைப் பார்த்து மிகவும் மகிழ்ச்சி அடைந்தார். மேலும் இங்கிருந்து காதியான் எவ்வளவு தூரம் எனக் கேட்டார். அதற்கு நான் 30 கோஸ் எனக் கூறினேன். ஷேக் சாஹிப் மர்ஹூம் நான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய சேவகன் ஆவேன் என்றார். நான் பதில் கூறினேன். அப்போது இவர் அஹ்மதியாகவில்லை. இவருடைய பேச்சு ஸ்டைல் இவ்வாறு இருந்தது. அதாவது ஒன்று, மிர்ஸா

சாஹிப் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு தலைவர் ஆவார். ஈஸாவாக ஆகி விட்டார். செல்வம் சேகரித்துக் கொண்டிருக்கிறார். சில நாட்களுக்குப் பிறகு மோசா ஹட்டில் ஒரு வலியுல்லாஹ்வுடைய ஒரு மஸார் உள்ளது. அதன் பெயர் பத்ஹே அலி ஷா ஆகும். எனது கனவில் இந்த பெரியவருடைய கபரில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் வந்தார்கள். நான் அவர்களுக்காக விரிப்பு விரித்தேன். ஹஸ்ரத் சாஹிப் அதில் அமர்ந்தார்கள். நான் அவர்களிடத்தில் நின்றேன். இவர் தனது கனவைப் பற்றி கூறுகின்றார். அன்னாருக்கு பணியாற்றிக் கொண்டிருந்தேன். ஒரு மாதம் வரை இதே நிலை தான் இருந்தது.

இதற்குப் பிறகு எனது கனவில் ஷா ஃபத்ஹே அலி சாஹிப் வந்தார்கள். அன்னார் காலத்தின் இமாம் காதியானில் தோன்றி விட்டார்கள் என்றார். நான் மிர்ஸா குலாம் அஹ்மதா? எனக் கேட்டேன். அப்போது அந்தப் பெரியவர் மிர்ஸா குலாம் அஹ்மது சாஹிப் எனக் கூறினார்கள். நான் இதனை சாதாரண கனவு என நினைத்து அமைதியாக இருந்தேன். சில நாட்களுக்குப் பிறகு எனது கனவில் வந்த பெரியவர் மீண்டும் வந்தார். நீ காதியான் ஏன் செல்லவில்லை? எனக் கேட்டார். மேலும் நீ ஏன் பைஅத் செய்யவில்லை எனக் கேட்டார்? விரைவாக சென்று பைஅத் செய் என்றார். நான் உறுதியான எண்ணத்துடன் விடுமுறையைப் பெற்று வீட்டிற்கு வந்தேன். வீட்டின் பிரச்சனையால் கொஞ்ச நேரம் ஆனது. பிறகு மீண்டும் அதே வலியுல்லாஹ் கனவில் வந்தார். நாம் உம்மை வீட்டில் போய் உட்காரச் சொல்லவில்லை. நீங்கள் சீக்கிரம் காதியான் சென்று பைஅத் செய்யுங்கள். அன்றைய நாளே நான் வீட்டை விட்டு புறப்பட்டு மோரா ராஸ்க்கு இரவில் சென்றடைந்தேன். அங்கு எனது உறவினர்கள் இருந்தனர். அங்கு தங்கினேன். அவர்கள் காலையில் செல்லலாம் என்றார்கள். நானும் அவர்களது பேச்சைக் கேட்டு சரி என்றேன். இரவு கனவில் ஷா ஃபத்ஹே அலி சாஹிப் என்னிடம் 15 கோஸ் வந்து விட்டீர்கள். இன்னும் 17 கோஸ் தான் மீதம் உள்ளது என்றார்கள். நாம் உன்னுடன் இருக்கின்றோம். உங்களுக்கு எதனைப் பற்றி பயமாக உள்ளது? என்றார்கள். பிறகு காலையில் பயணம் செய்தேன். காதியான் வந்தடைந்தேன்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தெற்குப் பக்கம் பல மக்களுக்கு மத்தியில் நடைபயிற்சி சென்றிருந்தார்கள். நான் மக்களிடம் ஏன் இவ்வாறு காட்டில் கூடியிருக்கிறீர்கள் என்றேன். அதற்கு மக்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நடைபயிற்சிக்கு செல்கிறார்கள். அவர்களுடன் செல்கிறோம் என்றார்கள். பிறகு நானும் சென்றடைந்தேன். அங்கு ஹுஸுரிடம் அஸ்ஸலாமு அலைக்கும் என்று கூறி முஸாபா செய்தேன். மிர்ஸா சாஹிப் என்னிடம் எங்கிருந்து வந்துள்ளீர்கள்? எனக் கேட்டார்கள். நான் ஹோஸ்யார்பூர் மாவட்டம், மோசா மிட்டியானாவிலிருந்து வந்துள்ளேன் என்றேன். உனது பெயர் என்னவென்று என்னிடம் கேட்டார்கள். அதற்கு நான் சோனே கான் எனக் கூறினேன்.

பிறகு கூறினார்கள். நீர், இதே கனவில் காணக்கூடிய அதே சோனே கானா எனக் கேட்டார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு அல்லாஹ் இவரைப் பற்றி தெரியப்படுத்தியிருப்பான். மேலும் நான் கூறினேன். நான் அதே உங்களது அடிமை ஆவேன் என்றேன். மூன்று நாட்கள் வரை தங்கியிருந்தேன். மூன்று நாட்களுக்குப் பிறகு பைஅத் வாங்குவோம் என்றார்கள். மூன்று நாட்களுக்கு பிறகு பைஅத் வாங்கினார்கள்.

பிறகு கூறினார்கள்: முதலில் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் ஏழைகள் தான் பைஅத் செய்தார்கள். ஏழை எளியவர்கள், வறியவர்கள் தான் அவரிடம் பைஅத் செய்கிறார்கள் என்று அவர் கூறினார். அதற்குப் பதிலாக ஹுஸுர் நேரடியாக கூறியிருக்கமாட்டார்கள் அல்லது செய்தி எட்ட வைக்கப்பட்டிருக்கலாம். எவ்வாறாயினும் ஈஸா நபி (அலை) அவர்களிடம் முதலில் பைஅத் செய்தது ஏழைகள்தான். அதேபோன்று என்னிடமும் முதலில் ஏழைகள்தான் பைஅத் செய்துள்ளார்கள. இதற்குப் பிறகு என்னிடம் கூறினார்கள். என்னை உண்மையாளர் என ஏற்றுக் கொள்ளுங்கள் என அவருக்கு அறிவுரை வழங்கினார்கள். ஒன்று எனது உண்மைத்துவத்தின் மீது முழுமையான நம்பிக்கை வைக்க வேண்டும். இரண்டாவது, ஐவேளை தொழுகைகளை தொழுங்கள். மூன்றாவது, ஒருபோதும் பொய் கூறக் கூடாது.

இதனைக் கூறிய பிறகு எனக்கு செல்வதற்கு அனுமதி வழங்கினார்கள். இந்த மூன்று அறிவுரைகளையும் ஒவ்வொரு அஹ்மதியும் எப்போதும் கண்முன் நிறுத்த வேண்டும்.

**ஹஸ்ரத் முஹம்மது பக்ஸ் சாஹிபுடைய மகன் ஹஸ்ரத் ஃபஸ்ல் இலாஹி சாஹிப் அறிவிக்கின்றார்கள்:**

ஒருமுறை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மற்றும் ஹஸ்ரத் அம்மா ஜான் நடைபயிறசி செய்தவாறு எங்களது ஊருக்கு வந்தார்கள். திரும்பிச் செல்லும் போது தண்ணீர் கொடுங்கள் எனக் கூறினார்கள். ஹஸ்ரத் அம்மா ஜானுக்கு தாகம் எடுத்தது. இது அவர்களுடைய கட்டுப்படுதலுக்குரிய எடுத்துக்காட்டான ஒரு சிறிய சம்பவம் ஆகும். எனது தாயார் டம்ளரில் தண்ணீர் ஊற்றிக் கொண்டு செல்லுமாறு கூறினார். நான் வேகமாக தண்ணீர் கொண்டு சென்றேன். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மற்றும் அம்மா ஜான் பாதையிலே நின்றார்கள். நான் தண்ணீரை அம்மா ஜானிடம் சென்று கொடுத்தேன். அவர்கள் அதனை வாங்கி உடனே குடிக்க ஆரம்பித்தார்கள். ஹஸ்ரத் சாஹிப் அப்போது, தண்ணீரை உட்கார்ந்து தான் குடிக்க வேண்டும் எனக் கூறினார்கள். அப்போது அம்மா ஜான் அவர்கள் ஒரு மடக்கு தண்ணீர் மட்டும் தான் குடித்திருந்தார்கள். இதனைக் கேட்டவுடனே உட்கார்ந்தார்கள். மீதமுள்ள தண்ணீரை உட்கார்ந்தே குடித்தார்கள்.

**ஹஸ்ரத் நிஸாமுத்தீன் சாஹிப் அறிவிக்கின்றார்கள்:**

ஒருமுறை நடந்த சம்பவம். அந்த காலத்தினுடைய வழக்கம் என்னவென்றால், முதலில் அனைத்து விருந்தினர்களும் கோல்கம்ராவில் ஒன்றுசேர்ந்து விடுவார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு, அனைவரும் ஒன்றுகூடி விட்டனர் என செய்தி தெரிவிக்கப்படும். ஒருநாள் ஹுஸுர் முதலிலேயே வந்திருந்தார்கள். ஹஸ்ரத் முதல் கலீஃபா அவர்கள் அப்போது வரை வரவில்லை. என்னிடம் ஹுஸுர் கூறினார்கள். நீங்கள் சென்று மவ்லவி சாஹிபை அழைத்து வாருங்கள் என்றார்கள். நான் அலுவலகத்திற்கு ஓடிச் சென்றேன். ஹுஸுருடைய கட்டளையைத் தெரிவித்தேன். ஹஸ்ரத் முதல் கலீஃபா அவர்கள் ஹுஸுர் அவர்கள் வந்து விட்டார்களா? எனக் கேட்டார்கள். அதற்கு நான் ஆம் என்றும், தங்களை நினைவு கூறினார்கள் என்றும் கூறினேன். அப்போது முதல் கலீஃபா அவர்கள் நூலகத்திலிருந்து ஓடிச் சென்றார்கள். கோல்கம்ரா வரை ஓடியே சென்றார்கள். பொதுவாக முதல் கலீஃபா அவர்கள் சபையில் தலையைக் குனிந்தவாறு இருப்பார்கள். எப்போதுவரை ஹுஸுர் அவர்கள் அவர்களை நோக்கி பேசமாட்டார்களோ அப்போது வரை தலை குனிந்தே இருப்பார்கள்.

**ஹஸ்ரத் ஹாபிஸ் ஜமால் அஹ்மது அறிவிக்கின்றார்கள்:**

ஒருமுறை மவ்லவி குலாம் முஹம்மது சாஹிப் மர்ஹூம் என்னிடம் கூறினார்கள். ஒருமுறை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் சார்பாக இரவு 11, 12 மணியளவில் ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் வீட்டிற்கு ஒருவர் பால் வாங்குவதற்காக வந்தார். அப்போது மவ்லவி சாஹிப் கூறினார்கள். எங்கள் வீட்டில் பால் இல்லையே என்றார்கள். என்னிடம் எங்கிருந்தவாறு பாலிற்கான ஏற்பாட்டை செய்யுங்கள். எவ்வளவு செலவானாலும் பரவாயில்லை. நான் ஒருபோதும் ஹஸ்ரத் சாஹிபுடைய ஆள் வெறும் கையோடு திரும்பிச் செல்வதை விரும்பவில்லை என்றார்கள். ஏதாவது ஒரு விருந்தினர் வந்திருக்கலாம். அவர்களுக்காக ஹுஸுர் அவர்கள் வாங்கி வரச் சொல்லியிருக்கலாம் என்றார்கள். நான் ஓடினேன். லங்கர் கானாவிற்கு எதிரே கட்டியிருந்த எருமையிடமிருந்து பால் கறந்து இருப்பார்கள். ஆனால் மீண்டும் இரவில் கறந்த போது பால் வந்தது. இதன் மூலம் மவ்லவி சாஹிப் மிகவும் மகிழ்ச்சி அடைந்தார்கள்.

**ஹஸ்ரத் ஹாபிஸ் ஜமால் அஹ்மது சாஹிப் கூறுகின்றார்கள்:**

மவ்லவி குலாம் முஹம்மது சாஹிப் மர்ஹூம் அறிவித்தார்கள். ஒருமுறை பட்டாலாவைச் சேர்ந்த ஒருவர், அவரது பெயர் எனக்கு மறந்து விட்டது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய அனுமதியுடன் ஒரு நோயாளியைப் பார்ப்பதற்காக ஹஸ்ரத் முதல் கலீஃபாவை பட்டாலா அழைத்துச் சென்றார். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மவ்லவி சாஹிப் மாலைக்குள் தாங்கள் திரும்ப வந்து விடுவீர்களா என்று கூறினார்கள். அதற்கு மவ்லவி சாஹிப் ஆம் ஹுஸுர்! வந்து விடுவேன் என்றார்கள். பட்டாலா சென்றடைந்ததும் இறைவன் அருளால் எப்படிப்பட்ட மழை பெய்தது என்றால் நாலாபுறமும் தண்ணீராக

தென்பட்டது. இதே நிலையில் மவ்லவி சாஹிப் அவர்கள் மாலையில் காதியான் வந்தடைந்தார்கள். முழங்கால் வரையுள்ள தண்ணீர் நடக்க வேண்டியிருந்தது. பாதங்களில் முள்கள் குத்தின. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு தெரிய வந்தபோது மிகவும் வருத்தம் அடைந்தார்கள். மேலும் மவ்லவி சாஹிப் எனது எண்ணம் இதுவாக இருக்கவில்லை. நீங்கள் ஏன்? இவ்வளவு கஷ்டத்தை மேற்கொண்டீர்கள் என்றார்கள்.

**ஹஸ்ரத் மியான் அப்துல் அஸீஸ் சாஹிப் அலி மருப் முஹ்ல் சாஹிப் அறிவிக்கின்றார்கள்:**

ஒருமுறை மவ்லவி நூருத்தீன் சாஹிப் தனது அலுவலகத்தில் உட்கார்ந்திருந்தார்கள். அப்போது ஏறக்குறைய 12 அல்லது 1 மணியாக இருந்தது. ஹஸ்ரத் உம்முல் மூஃமினீன் உள்ளேயிருந்து ஒரு பணியாளனை அனுப்பினார்கள். அவர் வந்து மவ்லவி சாஹிப் ஹஸ்ரத் உம்முல் மூஃமினீன் கூறுகின்றார்கள். நீங்கள் வந்து எனது கட்டை அவிழ்த்து விடுங்கள் என்று கூறினார்கள. அதற்கு மவ்லவி சாஹிப் பதில் கூறினார்கள். இந்த நிலையில் மருத்துவரீதியில் கட்டை அவிழ்ப்பது தடுக்கப்பட்ட ஒன்றாகும் எனக் கூறும்படி கூறினார்கள். சிறிது நேரம் கழித்து மீண்டும் வந்து அதையே கூறினார். முதல் கலீஃபாவும் அதே பதிலை கூறினார்கள். பிறகு சிறிது நேரத்திற்குப் பிறகு மியான் மஹ்மூது அஹ்மது வெளியே வந்தார்கள். அவர்களை மவ்லவி சாஹிப் இடுப்பில் தூக்கி வைத்துக் கொண்டார்கள. மேலும் நீங்கள் எப்படி வந்தீர்கள்? எனக் கேட்டார்கள். அப்பா கட்டை அவிழ்த்து விடுமாறு கூறினார்கள்.

மவ்லவி சாஹிப் உடனேயே சென்று கட்டை அவிழ்த்தார்கள். திரும்பிச் சென்ற போது ஒரு நபர் குலாம் முஹம்மது சாஹிப் கூறினார். இவ்வாறு கட்டை அவிழ்ப்பது தடை செய்யப்பட்டது என்று கூறினீர்களே? என்றார். அதற்கு இப்போது மருத்துவம் கிடையாது. கட்டளையாகும் என்றார்கள்.

மியான் ஷராபத் அஹ்மது சாஹிப் தனது தந்தை ஹஸ்ரத் மவ்லவி ஜலாலுத்தீன் உடைய நிலைமைகளை விளக்கியவாறு கூறுகின்றார்கள். ஹஸ்ரத் முதல் கலீஃபாவுடன் எனது தந்தையாருக்கு ஒரு நல்ல நெருக்கம் இருந்தது. ஹுஸூரும் அவர்கள் மீது சிறப்பான ஒரு கருணை கொண்டிருந்தார்கள்.

ஹஸ்ரத் மவ்லவி முதல் கலீஃபாவுடைய தாயார் அவர் சமுதாயத்தை சேர்ந்தவராக இருந்தார்கள். மேலும் மவ்லவி ஜலாலுத்தீன் சாஹிப் அவர் சமுதாயத்தை சேர்ந்தவராக இருந்தார்கள். எனவே மவ்லவி சாஹிப் அன்னாருடன் அன்புடன் பரிமாறி வந்தார்கள். மவ்லவி சாஹிபுக்கு முதல் கலீஃபாவுடைய கட்டளை என்னவாக இருந்தது என்றால் காதியான் வந்தீர்கள் என்றால், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது சபையில் உட்கார வேண்டும். அடுத்து எனது சபையில் உட்கார வேண்டும். இதனைத் தவிர வேறெங்கும் செல்வதற்கு உங்களுக்கு அனுமதி கிடையாது என்பதாகும்.

எனது தந்தையார் இவ்வாறே செய்து வந்ததாக கூறினார்கள். ஹஸ்ரத் ஸஃபருல்லாஹ் கான் சாஹிபுடைய மகன் ஹஸ்ரத் முஹம்து ஸஃபருல்லாஹ் கான் சாஹிப் கூறுகின்றார்கள். ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் அன்றைய நாட்களில் அலுவலகத்தில் பணி மட்டுமல்லாது அன்னார் ஹக்கீம் குத்புத்தீன் சாஹிபின் மருந்தகத்தில் மவ்வலி மவ்லானா ரோம் உடைய தர்ஸ் கொடுத்து வந்தார்கள். எனக்கு எனது தந்தையாருடன் அந்த நட்பை பெறுவதற்கான வாய்ப்பு கிடைத்து வந்தது. எனக்கு நன்றாக நினைவில் உள்ளது. சில சமயங்களில் இந்த தர்ஸிற்கு இடையில் யாராவது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் வெளியில் வந்துள்ளார்கள் எனக் கூறி விட்டால் இதனைக் கேட்டதும் ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் தர்ஸை நிறுத்தி விடுவார்கள். உடனே எழுந்து நின்று தலைப்பாகையை கட்டிக் கொண்டே ஷுவை போடுவதற்கு முயற்சி செய்தார்கள். இந்த முயற்சிகளின் விளைவாக பெரும்பாலும் ஷுவின் பின்புறம் அமுங்கி விடும்.

அன்னார் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது சபையில் உட்கார்ந்திருக்கும் போது, எப்போது வரை ஹுஸூர் அவர்கள் அன்னாரைக் கூப்பிட்டுப் பேசமாட்டார்களோ அப்போதுவரை ஹுஸூரின் முகத்தினை தலைதூக்கிப் பார்க்க மாட்டார்கள்.

**ஹஸ்ரத் சூஃபி குலாம் முஹம்மது சாஹிப் கூறுகின்றார்கள்:**

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் வஃபாத்திற்குப் பிறகு நாங்கள் அனைவரும் ஹஸ்ரத் நூருத்தீன் சாஹிபிடம் பைஅத் செய்தோம். மவ்லவி சாஹிப் கூறினார்கள். நேற்று வரை நான் உங்களது சகோதரனாக இருந்தேன். ஆனால் நான் உங்களது தந்தையாக ஆகிவிட்டேன். நீங்கள் எனக்கு கட்டுப்பட்டு நடக்க வேண்டும். அமத்துல் ஹஃபீஸ் மிகச் சிறந்தவள் ஆவாள். அதாவது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய குடும்பத்தினரை சுட்டிக்காட்டி கூறுகின்றார்கள். அமத்துல் ஹஃபீஸ் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் குடும்பத்தில் மிகவும் சிறியவள் ஆவாள். அமத்துல் ஹபீஸிடம் பைஅத் செய்ய வேண்டிய இருந்தால் நான் அவருக்கு எவ்வாறு கட்டுப்படுவேன் என்றால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு கட்டுப்படுவதைப் போன்று கட்டுப்படுவேன் என்றார்கள்.

அல்லாஹ் இந்த அனைத்து சஹாபாக்களின் தர்ஜாவை மேம்படுத்திக் கொண்டே செல்வானாக! எவ்வாறு அவர்களது விருப்பம் இருந்ததோ அதேபோன்று மறுமையிலும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடன் இருப்பானாக! இவர்களது விருப்பங்கள் நிறைவேறட்டுமாக! இவர்களது சந்ததிகளையும் கட்டுப்படுதல் மற்றும் விசுவாசத்தில் நிலைத்திருக்கச் செய்வானாக! முழுமையான கட்டுப்படுதலுடன் இக்காலத்தின் இமாமுடன் தொடர்பை ஏற்படுத்தக்கூடிய வாய்ப்பினை நமக்கு வழங்குவானாக!

அன்னார் தனது தூயவர்களுக்காக செய்த துஆக்களில் நாமும் வாரிசு ஆவோமாக! அன்னாருக்குப் பிறகு அன்னார் மூலமாக தொடர்ந்த இரண்டாவது வல்லமையுடனும், விசுவாசம், நேசம் மற்றும் கட்டுப்படுதலுக்கான உயரிய தரத்தை ஏற்படுத்தக்கூடியவர்களாக ஆவோமாக! எவ்வாறு நான் முதல் கலீஃபத்துல் மஸீஹ் உடைய கூற்றினைப் படித்து கட்டினேனே அதனைப் போன்று முழுமையான கட்டுப்படுதல் வேண்டும். கிலாஃபத்துடன் இணைத்து அல்லாஹ்வுடைய அருள்களின் வாரிசாகக்கூடிய ஜமாஅத்தின் அங்கங்களாக ஆவோமாக! இதனைத் தவிர இறைவனுடைய அருள் கிடைக்கப் பெறாது. அல்லாஹ் அனைவருக்கும் இதற்கான வாய்ப்பினை தந்தருள்வானாக!

நான் ஜுமுஆ மற்றும் அஸர் தொழுகைக்குப் பிறகு 2 ஜனாஸா தொழுகைகளை தொழ வைப்பேன்.

முதல் ஜனாஸா ஒரு ஷஹீது உடையதாகும். கண்ணியத்திற்குரிய முபாரக் அஹ்மது சாஹிபுடைய மகன் மதிப்பிற்குரிய தாரிக் அஹ்மது சாஹிப் ஆகும். இவர் பாகிஸ்தானில் லையாவுடைய ஒரு கிராமத்தில் பிறந்தார்கள். தாரிக் சாஹிப் பிறப்பதற்கு இரண்டு மாதங்களுக்கு முன்பே அவருடைய தந்தையார் மரணமடைந்து விட்டார்கள். மதிப்பிற்குரிய தாரிக் சாஹிபுடைய வயது 41 ஆக இருந்தது. மிகவும் அறிவு நிறைந்த திறமையுள்ளவராக திகழ்ந்தார். மே 17 ம் தேதி 2012 ஆம் ஆண்டு தாரிக் சாஹிப் சாமான் வாங்குவதற்காக லையா மாவட்டத்தில் கரோடுக்கு சென்றார்கள். மேலும் வியாபாரிகளுக்கு கொடுக்க வேண்டிய ரூபாயை கொடுத்து விட்டு வந்தார்கள். வீடு திரும்பும் போது மாலை 4.00 மணிக்க வீட்டிற்கு போன் செய்து காய்கறிகள் எல்லாம் வாங்கி விட்டேன். வேறு எதாவது வாங்க வேண்டியதுள்ளதா? எனக்கேட்டுள்ளார். அதற்கு பிறகு அன்னாருடன் எந்தத் தொடர்பு கொள்ள முடியாமல் போனது. இரவு ஆகியும் வீடு திரும்பவில்லை. போன் மூலமாக தொடர்பு கொள்ள முயன்றும், தொடர்பு கொள்ள முடியவில்லை.

பின்னர் தெரிய வந்தது என்னவென்றால் வீடு திரும்பும்போது அடையாளம் தெரியாத சில நபர்கள் அவரை கடத்தி அடையாளம் தெரியாத ஓரிடத்திற்கு கொண்டு சென்றுள்ளனர். கை, கால்கள் எல்லாம் கட்டப்பட்டு இருந்தது. மிகவும் கொடுமையாக தாக்கப்பட்டு இருந்தார். தாக்கப்பட்டபோது மர்ஹூமுடைய ஒரு காலை உடைத்து விட்டனர். ஒரு தோள்பட்டையும் எலும்புகளையும் உடைத்திருந்தனர். முழங்கால்களில் ஆணியின் அடையாளங்கள் இருந்தன. கண்களிலும் பலமான காயங்கள் இருந்தன. தலையும் அதிகமாக தாக்கப்பட்டிருந்தது. இவ்வளவு தூரம் தாக்கிய பிறகு இறுதியில் தலையை துப்பாக்கியால் சுட்டுள்ளனர். இவ்வாறு அவரை ஷஹீதாக்கி உள்ளனர். இன்னா லில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன்.

இதனை விட கொடுமையின் உச்சநிலை என்னவென்றால், முதலில் செய்ததே கொடுமையின் உச்சநிலைதான்; பின்னர் அவரை ஒரு டிரம்மில் போட்டு ராஜ்நிஸா நதியில் போட்டு விட்டனர். எதிர்பாராதவாறு

நதி அடைக்கப்பட்டு இருந்தது. இல்லையென்றால் சடலத்தைப் பற்றி தெரியாமலேயே போயிருக்கும். மறுநாள், காவல்துறையினர் ஒரு சடலம் கிடைத்திருப்பதாக கூறினார்கள். உறவினர்களால் முகத்தை வைத்துக் கண்டுபிடிக்க முடியவில்லை. அந்த அளவுக்கு மோசமாக தாக்கப்பட்டிருந்தார். அவரது உடை மற்றும் வேறு பல அடையாளங்களைக் கொண்டு உறவினர்கள் அவரை அடையாளம் கண்டனர்.

அமீர் சாஹிபுடைய ரிப்போர்ட்டின் அடிப்படையில் இது ஜமாஅத்தின் எதிர்ப்பினால் உண்டானதில்லை என்பதாகும். ஆனால் எனது எண்ணத்தின்படி ஜமாஅத்தின் எதிர்ப்பே இதற்குக் காரணமாகும். இவர் நல்லியல்பு கொண்டவர் ஆவார். யாருடனும் அதிக தொடர்பு கிடையாது. இவரது உறவினரையும் இதற்கு முன்பு துப்பாக்கிச் சூடு நடத்தி காயங்களை ஏற்படுத்தினார்கள். அல்லாஹ் இவரது தர்ஜாவை உயர்த்துவானாக! மேலும் இந்த எதிரிகளை மிக விரைவில் படிப்பினைக்குரிய அடையாளமாக ஆக்குவானாக! அஹ்மதிய்யத்தின் உரிமையில் மிகத் தெளிவான அடையாளங்களை மிக விரைவில் வெளிப்படுத்துவாயாக! இதனை எப்போதும் நினைவில் வையுங்கள். அதாவது இப்படிப்பட்ட நிலையில் எப்போது வரை துஆக்களின் பக்கம் கவனம் செலுத்தமாட்டோமோ, இறைவனிடம் அடையாளங்கள் வேண்டமாட்டோமோ அப்போது வரை இறைவன் வாக்குறுதி அளித்துள்ள அந்த வெற்றிகள் நமக்கு கிடைக்கப் பெறாது.

பொதுவாக அடையாளங்களுக்குப் பிறகு கிடைக்கக்கூடிய வெற்றிகள் தான் தெளிவான மற்றும் எதிரிகளுக்கு தென்படக் கூடியதாக இருக்கும். அப்போதுதான் எதிரி உண்மையை ஏற்றுக் கொள்வான். ஒரு இயற்கைக்கு அப்பாற்பட்ட ஒரு வெற்றி எப்போது கிடைக்கும் என்றால் நாம் முழுமையான முறையில் அவன் முன்பு குனியும் போது, அவனிடம் துஆ கேட்கும்போது, மேலும் அல்லாஹ் மற்றும் அவனது அடியாருக்குரிய உரிமைகளை நிறைவேற்றும்போது தான் கிடைக்கும். அல்லாஹ் இதற்கான வாய்ப்பினை நமக்கு வழங்குவானாக!

ஷஹீதுடைய சகோதரர் ஆரிப் அஹ்மது சாஹிப் ஜமாஅத்தின் முரப்பி ஆவார். அவரும் அவரது சிறப்பு அம்சங்களைக் கூறியுள்ளார். இவர் மிகவும் அன்பு செலுத்தக் கூடியவர் ஆவார். மனைவியைத் தவிர ஆறு மகன்களும் இரண்டு மகள்களும் உள்ளனர். மூத்த மகனது வயது 18 ஆகும். சிறிய பிள்ளையுடைய வயது இரண்டு ஆகும். இதற்கிடையில் மற்ற பிள்ளைகள் உள்ளனர். அல்லாஹ் இவர்கள் அனைவரையும் தனது பாதுகப்பில் வைப்பானாக!

இரண்டாவது ஜனாஸா அமத்துல் கையும் சாஹிபா உடையதாகும். இவர் ரப்வாவில் வசிக்கக்கூடியவர் ஆவார். இவர் ஷேக் அப்துஸ் ஸலாம் சாஹிபுடைய மனைவி ஆவார். மே 3 ம் தேதி மரணமடைந்தார்கள். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன்.

இவர் ரப்வாவில் குடியேறிய பழைய குடும்பங்களில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவராவார். இவர் மூஸி ஆக இருந்தார். இவருக்கு மூன்று மகள்களும் ஐந்து மகன்களும் உள்ளனர். இங்கு அவரது ஒரு மகன் அப்துல் ஹபீஸ் சாஹிப் இருக்கின்றார்கள். இதனைப்போன்று ஹாலந்திலும் உள்ளனர். ரப்வாவிலும் உள்ளனர. இவரது இரண்டு பேரன்கள் ஜாமிஆ அஹ்மதிய்யா U.K.ல் கல்வி பயின்று வருகிறார்கள். அல்லாஹ் மர்ஹூமுடைய தர்ஜாவை உயர்த்துவானாக!

★ ★ ★ ★ ★

**JUMUA KHUTBA**

**HADHRAT KHALIFATUL MASIH V**

**AT BAITUS SABUH MOSQUE, GERMANY**

**ON 25.05.2012**

Translated by : Maulavi N. ZIYAUL HAQ

Published by : MAJLIS KHUDDAMUL AHMADIYYA
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
TELEFAX : 0462 - 2352456